

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முரசொலி மாறன் பூங்காவினை 8 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கும் பணி மற்றும் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டப் பணிகளை திறந்து வைத்தார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர், துணை மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கொளத்தூர் தொகுதியில் புதிய திட்டப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 25 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முரசொலி மாறன் பூங்காவினை 8 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கும் பணி மற்றும் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 13 கோடியே 95 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 8 கோடியே 65 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு பள்ளிக் கட்டடங்கள், மேம்படுத்தப்பட்ட கால்பந்து மைதானம் மற்றும் விளையாட்டுத் திடலை திறந்து வைத்தார்.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் முரசொலி மாறன் பூங்கா மறுசீரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் பெரம்பூரில் அமைந்துள்ள முரசொலி மாறன் பூங்காவினை 8 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், சீனிவாச நகர் 3வது பிரதான சாலையில் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டடம் மற்றும் சமையல்கூடம்; ஜி.கே.எம். காலனி பிரதான சாலையில் 28 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம்; ஜி.கே.எம். காலனி 32வது தெருவில் 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம்; பல்லவன் சாலையில் அமைந்துள்ள தாங்கல் மயான பூமியில் 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு உள்கட்டமைப்புகளுடன் கூடிய நீத்தார் மண்டபம்; வார்டு 64 முதல் 78 வரையிலான பல்வேறு தெருக்களில் 10 கோடி ரூபாய் மதிப்பில் 10,463 LED தெரு விளக்குகளை மாற்றி புதிய விளக்குகள் பொருத்தும் பணி;

**என மொத்தம் 13 கோடியே 95 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரங்கசாயி தெருவில் உள்ள மேயர் முனுசாமி விளையாட்டு திடலில் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட மைதானத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், துறை செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பா. கணேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் திறந்து வைக்கப்பட்ட பணிகளின் விவரங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் திரு.வி.க. நகர் மண்டலம், சோமையா தெருவில் புதிதாக 10 வகுப்பறைகளுடன், 3 கோடியே 59 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் தரை மற்றும் முதல் தளத்துடன், சுற்றுச்சுவர் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள சென்னை உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் பெரம்பூர், ரங்கசாயி தெருவில் புதிதாக 10 வகுப்பறைகளுடன் தரை மற்றும் முதல் தளத்துடன், சுற்றுச்சுவர் உள்ளிட்ட வசதிகளுடன் 3 கோடியே 96 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம்;

திரு.வி.க. நகர் மண்டலம், ரங்கசாயி தெருவில் அமைந்துள்ள மேயர் முனுசாமி விளையாட்டு திடலில் 64 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் செயற்கை நீரூற்று, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள், திறந்தவெளி இறகு பந்தாட்ட மைதானம், மின் விளக்குகள், பசுமை புல்வெளி உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆஸ்ட்ரோ டர்ஃப் கால் பந்து மைதானம்;

திரு.வி.க. நகர் மண்டலம், அமிர்தம்மாள் காலனியில் 45 இலட்சம் ரூபாய் செலவில் இறகுப்பந்து மைதானம், சிறுவர் விளையாட்டு மைதானம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடல்;

**என மொத்தம் 8 கோடியே 65 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு பள்ளிக் கட்டடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட கால்பந்து மைதானம் மற்றும் விளையாட்டுத் திடலை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

முன்னதாக, சோமையா தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர், சோமையா தெருவில் 4.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**ஜவஹர் நகரில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணப் பொருட்கள் மற்றும் மடிக்கணினியை வழங்கினார். மேலும், பயனாளிகளுக்கு மருத்துவ உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மாவு அரவை இயந்திரங்கள், மூன்று சக்கர மோட்டார் வாகனம், தள்ளு வண்டி, சாலையோர வியாபாரிகளுக்கு குடைகள் ஆகியவற்றை வழங்கினார்.

**அனிதா அச்சீவர்ஸ் அகாடமி**

அதனைத் தொடர்ந்து, பெரியார் நகர் விளையாட்டு மைதானத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயிற்சி முடித்த 126 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் சான்றிதழ்களையும், 356 மகளிர்க்கு தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும், கொளத்தூரிலுள்ள கலைஞர் நூற்றாண்டு கண் சிகிச்சை மையத்தில் பரிசோதனை மேற்கொண்டவர்களில் 200 நபர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் மற்றும் புத்தாடைகளை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பா. கணேசன், பெரியார் அரசு மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் கே. ஹேமலதா, அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் தளபதியார் அவர்களின் நல்லாட்சியில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 36க்காக லீனா தொடக்கப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர், 14 தூய்மைப்பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டைகளை 23.9.2025 அன்று வழங்கினர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், நலவாரிய துணை தலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், உதகை நகரமன்ற தலைவர் திருமதி.வாணிஸ்வரி, நகர மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார் மற்றும் உதகை மேற்கு நகர செயலாளர் ரமேஷ், குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருவெறும்பூர் அருகே உள்ள வேங்கூர் ஊராட்யில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். முகாமிற்கு திருவெறும்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்தகுமார், அண்ணாதுரை, ஒன்றிய கழகச் செயலாளர் கே.எஸ்.எம்.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இந்த முகாமில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, உட்பட அரசு அதிகாரிகளும் பொதுமக்களும் அரசியல் கட்சி பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.